# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8029487

1. District : மாவட்டம் அரியலூர் PS: காவல்நிலையம் [illegible] பிரிவு அரியலூர் Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 2/2019 Date: நாள் 01.03.2019

2. (i) Act சட்டம்: P.C. Act 1988 as amended Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
(ii) Act சட்டம்: by PC Act (Amendment) Sections பிரிவுகள்: as amended by PC Act
(iii) Act சட்டம்: 2018. Sections பிரிவுகள்: (Amendment) 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 28.2.2019 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16.00 hrs Time to : நேரம் வரை 20.00 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.03.2019 Time நேரம் 14.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 2 கி.மீ. மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வட்ட வழங்கல் அலுவலகம், அரியலூர், அரியலூர் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.P. ராஜு (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பெரியண்ணன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 57/19 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வு குழு ஆய்வாளர். (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், அரியலூர் மற்றும் திருச்சி மாவட்டம், திருச்சி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
60 - திரு. த. கிருஷ்ணமூர்த்தி, வட்ட வழங்கல் அலுவலர் (பொறுப்பு), அரியலூர் / கோட்ட கலால் அலுவலர், அரியலூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
[illegible] தாமதம்.

GCP 240-34(Type 2) 90,000 Cps -21.3 16(HCL-12)

தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வுசெயல்முறைகள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள(ஒப்பம் ஆங்கிலத்தில்) P.Balu (P.பாலு)1.3.2019. மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், அரியலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி. இணைப்பு 1.திடீர் ஆய்வு செயல்முறைகள் நாள் 28.02.2019. 2.ரொக்கம் ரூபாய் 42,000/- மற்றும் இதர ஆவணங்கள். **பணிந்து சமர்பிக்கப்படுகிறது.** அய்யா, இன்று 01.03.2019 ஆம் தேதி பகல் 14.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனு தொடர்பாக சட்டக்கருத்துரை பெற்று அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.02/2019, சட்டப்பிரிவு 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption(Amendment) Act 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

(க.ரமேஷ் குமார்), 1.3.2019
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
அரியலூர்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் மனு மற்றும் திடீர் ஆய்வு செயல்முறைகள் ஆகியவற்றை இணைத்து, கனம் தலைமை நீதித்துறை நடுவர்/சிறப்பு நீதிபதி, அரியலூர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

(க.ரமேஷ் குமார்), 1.3.2019
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
அரியலூர்.

| | | | |
|---|---|---|---|
| 8 | திரு.S.பழனிசாமி, விற்பனையாளர், ஆங்கியனூர் | 240 | 500 |
| 9 | திரு.R.பஞ்சமூர்த்தி, விற்பனையாளர், பொய்யூர் | 300 | 500 |
| 10 | திரு.M.ராஜா, விற்பனையாளர், கள்ளங்குறிச்சி | 10 | 1,500 |
| 11 | திரு.R.கருப்பையா, விற்பனையாளர், தாமரைகுளம் | 470 | 1,500 |
| 12 | திரு.N.வெங்கடாச்சலம், விற்பனையாளர், வாலாஜாநகரம், | 900 | 1,500 |
| | **மொத்தம்** | **11,460** | **42,000** |

அரியலூர் வட்ட வழங்கல் அலுவலகத்தையும், அலுவலகத்தை சுற்றியுள்ள பகுதிகளையும் மாவட்ட ஆய்வுகுழு ஆய்வாளராகிய நான் சோதனை செய்தபோது கீழ்கண்ட விபரப்படி வட்ட வழங்கல் அலுவலர், கணினிபதிவாளர் (தற்காலிக பணியாளர்) மற்றும் கூட்டுறவு அங்காடி விற்பானையாளர்கள் ஆகியோரால் கணக்கில் கூற இயலாத பணம் இருந்தது தெரியவந்தது. மேலும் திரு.S.கிருஷ்ணமூர்த்தி, பொறுப்பு வட்டவழங்கல் அலுவலர், அரியலூர்/ கோட்ட கலால் அலுவலர், அரியலூர் அவர்களின் டேபிள் டிராயரில் இருந்த தொகை ரூபாய் 12,000/- மற்றும், திரு.த.உதயகுமார், கணினி பதிவாளர்(Data Entry Operator) Elcot (தற்காலிக பணியாளர்) அவர்களின் டேபிளின் மேல் இருந்த ரூபாய் 24,500/-ஆகியவற்றை பற்றி விளக்கம் கேட்க சரியான முகாந்திரம் கூறாததால் அந்ததொகை யாரிடமாவது கையூட்டாக பெற்று வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் **ரூபாய்.42,000/-** மற்றும் 1)அரியலூர் கோட்ட கலால் பிரிவு வருகை பதிவேடு, 2)அரியலூர் வட்டாட்சியர் அலுவலக வருகை பதிவேடு ஆகிய 2 ஆவணங்கள் இந்த திடீர் ஆய்வின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின் போது அரியலூர் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்தில் இருந்த அனைவரையும் மாவட்ட ஆய்வுகுழு ஆய்வாளராகிய என்னால் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேற்படி அலுவலர்கள் மற்றும் வெளிநபர்களை விசாரணைக்கு தேவைப்படும் போது ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டது. இந்த திடீர் ஆய்வு செயல்முறைகள் இரவு சுமார் 08.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் அரசு அலுவலர்களிடமிருந்தோ, அவர்களது இருக்கையிலிருந்தோ கைப்பற்றப்பட்ட பணம் தகுந்த முகாந்திரம் கூறஇயலாத அந்தபணம் யாரிடமாவது கையூட்டாக பெற்று வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பணம் கைப்பற்றப்பட்டால் அந்த தொகை Illegal gratification (கையூட்டு) எனக் கருதப்படும். 28.02.2019 ஆம் தேதி அரியலூர் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்தில் திடீர் ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட **மொத்தம் ரூபாய் 42,000/-** லஞ்சத் தொகையாக கருதப்படுவதால் அதன்மீது பூர்வாங்க விசாரணை செய்து மேற்படி திரு.S.கிருஷ்ணமூர்த்தி, பொறுப்பு வட்டவழங்கல் அலுவலர், அரியலூர்/ கோட்ட கலால் அலுவலர், அரியலூர் என்பவர்மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்குபதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் 28.02.2019 ஆம் தேதி

செல்புகள் உடையதுமாக அரியலூர் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகம் அமைந்துள்ளது. மேற்படி அரியலூர் வட்ட வழங்கல் அலுவலர் அறையில் வட்ட வழங்கல் அலுவலர் பொறுப்பு திரு.S.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அமர்ந்திருந்த இருக்கைக்கு அருகே 1)திரு.M.ராஜா, விற்பனையாளர், கள்ளங்குறிச்சி, 2)திரு.M.முத்துசாமி, விற்பனையாளர் ஓய்வு, 3)திரு.R.கருப்பையா, விற்பனையாளர், தாமரைகுளம், 4)திரு.N.வெங்கடாச்சலம், விற்பனையாளர், வாலாஜாநகரம், 5)திரு.R.பஞ்சமூர்த்தி, விற்பனையாளர், பொய்யூர், 6)திரு.G.பாஸ்கரன், விற்பனையாளர், கல்லூர் ஆகியோரும், திரு.த.உதயகுமார், கணினி பதிவாளர்(Data Entry Operator)Elcot(தற்காலிக பணியாளர்) என்பவரது இருக்கைக்கு அருகில் 1)திருமதி.மேகலா, இந்திராநகர், திருமானூர், 2)திரு.D.ஜான்எடிசன், இந்திராநகர், இலந்தைகூடம், 3)திரு.T.விவேக்ராஜ், இந்திராநகர், இலந்தைகூடம், 4)திரு.S.பழனிசாமி, வித்பனையாளர், ஆங்கியனூர் ஆகியோர் நின்றிருந்தனர். மேற்படி அரியலூர் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்தில் இருந்த அனைவருக்கும் திடீர் ஆய்வு செய்ய வந்துள்ள நோக்கத்தை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் ஆகிய நான் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் தெரிவித்தபோது, மேற்படி இடத்தில் நின்று கொண்டிருந்த சிலநபர்கள் அவரவர்கள் நின்று கொண்டிருந்த இடத்தைவிட்டு நழுவ முயற்சித்தார்கள். மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் ஆகிய நான் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும் விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் சோதனை மேற்கொண்டபோது கீழ்கண்டவாறு தனித்தனியாக பணம் வைத்திருந்தது தெரியவந்தது. சரியான முகாந்திரம் கூறிய தொகை அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது, சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகை மற்றும் கையூட்டு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் **ரூபாய்.42,000/-ம்** திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் முகவரி | திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய் | கைப்பற்றப்பட்ட ரூபாய் |
|---|---|---|---|
| 1 | திருமதி.மேகலா, இந்திராநகர், திருமானூர் | 930 | - |
| 2 | திரு.D.ஜான்எடிசன், இந்திராநகர், இலந்தைகூடம் | 5,300 | - |
| 3 | திரு.T.விவேக்ராஜ், இந்திராநகர், இலந்தைகூடம் | 710 | - |
| 4 | திரு.G.பாஸ்கரன், விற்பனையாளர், கல்லூர் | 170 | - |
| 5 | திரு.M.முத்துசாமி, விற்பனையாளர் ஓய்வு, ஓ.கூத்தூர் | 230 | - |
| 6 | திரு.S.கிருஷ்ணமூர்த்தி, பொறுப்பு வட்ட வழங்கல் அலுவலர், அரியலூர்/ கோட்ட கலால் அலுவலர், அரியலூர் | 700 | 12,000 |
| 7 | திரு.த.உதயகுமார், கணினி பதிவாளர்(Data Entry Operator)Elcot தற்காலிக பணியாளர் | 1,500 | 24,500 |

<u>**அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 2/2019 வழக்கின் தொடர்ச்சி**</u> :-

அரியலூர் பேருந்து நிலையத்திற்கு எதிரில் உள்ள அரியலூர் வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்தின் முதல்தளத்தில் அமைந்துள்ள அரியலூர் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்திற்கு 28.02.2019 ஆம் தேதி மாலை சென்று திரு.S.கிருஷ்ணமூர்த்தி, வட்ட வழங்கல் அலுவலர்(பொறுப்பு), அரியலூர்/கோட்ட கலால் அலுவலர், அரியலூர் மற்றும் அங்கிருந்தவர்களிடம் என்னையும், காவல் ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினரையும் அறிமுகம் செய்துகொண்டு, அரியலூர் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்தை 28.02.2019 ஆம் தேதி மாலை சுமார் 04.00 மணிமுதல் இரவு சுமார் 08.00 மணிவரை அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திரு.க.ரமேஷ்குமார் மற்றும் அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டு, சோதனையின்போது கணக்கு கூறஇயலாத மற்றும் கையூட்டு தொகையாக கருதக்கூடிய **ரூபாய்.42,000/-** அரியலூர் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்திலிருந்து கைப்பற்றப்பட்டு, அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலக மடிக்கணினி மூலம் திடீர் ஆய்வு செயல்முறைகள் தயார் செய்யப்பட்ட விபரம் பின்வருமாறு. அரியலூர் மாவட்டம், அரியலூர் தாலுக்கா, அரியலூர் பேருந்து நிலையம் எதிரில் உள்ள அரியலூர் வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்தின் முதல் தளத்தில் உள்ள அரியலூர் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்தில் ஒவ்வொரு மாத இறுதியிலும் மாதந்திர கூட்டம் நடைபெறும் போது அரியலூர் வட்ட வழங்கல் அலுவலர் அவர்கள் அரியலூர் தாலுக்காவில் உள்ள அனைத்து அரசு நியாயவிலை கூட்டுறவு அங்காடி விற்பனையாளர்களிடம் கையூட்டு கேட்டுப் பெறுவதாகவும், அங்காடி விற்பனையாளர்கள் மேற்படி பொது பணியாளருக்காக கையூட்டு கொடுப்பதாகவும், அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் 28.02.2019 ஆம் தேதி மாலை சுமார் 04.00 மணிக்கு மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளராகிய நான் மேற்படி விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் அரியலூர் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அரியலூர் வட்ட வழங்கல் அலுவலகமானது அரியலூர் பேருந்து நிலையம் எதிரில் உள்ள அரசு அலுவலக கட்டிடங்கள் அடங்கிய வளாகத்தில் அரியலூர் வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்தின் முதல் தளத்தில் படிகட்டுகளை ஒட்டினார் போல் மேற்கு பக்கம் கிழக்கு பார்த்த வாசலுடன் அரியலூர் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகம் அமைந்துள்ளது. அரியலூர் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்தின் உள்ளே நுழைவாயிலுக்கு எதிர்புறம் திரு.S.கிருஷ்ணமூர்த்தி, வயது.47/2019, த/பெ.சுப்பிரமணியம், பொறுப்பு வட்டவழங்கல் அலுவலர், அரியலூர்/ கோட்ட கலால் அலுவலர், அரியலூர் அவர்களின் இருக்கை மற்றும் மேஜையும், அந்த அறையின் வடக்கு மூலையில் கணினியிடன் கூடிய மேஜையும், அதனை அடுத்தார் போல் கிழக்கு பக்கம் திரு.த.உதயகுமார், கணினி பதிவாளர்(Data Entry Operator)Elcot(தற்காலிக பணியாளர்) என்பவரது இருக்கை மற்றும் மேஜையும், அதற்கு அடுத்தார் போல் கிழக்கு மூலையில் ஒரு பீரோவும், அந்த அறையில் ஆங்காங்கே கோப்புகள் வைப்பதற்குண்டான

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்பிக்கப்படுகிறது</u> இன்று 01.03.2019 ஆம் தேதி பகல் 14.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் க.ரமேஷ் குமார் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.P.பாலு, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், அரியலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புதல் P.பாலு, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், அரியலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி. பெறுதல் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு, அரியலூர். ந.க.எண்.71/2019/அ1, நாள் 01.03.2019. அய்யா, பொருள் அரியலூர் மாவட்டம், அரியலூர் தாலுக்கா, அரியலூர் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகம் - 28.02.2019 அன்று அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டது - மேல்நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் கொடுத்தல் - தொடர்பாக. பார்வை : திடீர் ஆய்வுசெயல்முறைகள் நாள் 28.02.2019. அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி ரகசிய தகவலின் அடிப்படையில், 28.02.2019 ஆம் தேதி மாலை அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திலிருந்து காவல் ஆய்வாளர் திரு.க.ரமேஷ் குமார் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு, அரியலூர் மாவட்டம்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு 1-3-19

Signature of the Officer in-charge, Police Station 01.03.2019
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

01.03.2019 | 16.00 hrs

Name: பெயர் G. RAMESH KUMAR
Rank: நிலை ........................No. எண் ..........
**Inspector of Police,**
**Vigilance and Anti-Corruption,**
**Ariyalur.**

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3 16(HCL-12)p 2